# புனித மரியாவின் மாசற்ற இதயத்துக்கு உக்ரைனையும் ரஷ்யாவையும் ஒப்புக்கொடுத்தல்

## மார்ச் – 25, 2022

**திருத்தந்தையின் வேண்டுகோளுக்கிணங்க மார்ச் - 25, 2022 (ஆண்டவருடைய பிறப்பின் அறிவிப்புப் பெருவிழா) அன்று உக்ரைன், ரஷ்ய நாடுகளுக்காக மன்றாடுவோம்**



(திருத்தந்தை பரிந்துரைத்த மன்றாட்டு தழுவியமைக்கப்பட்டுள்ளது)

**அருள்பணி. ம. அலெக்சாண்டர்**
பொதுச்செயலர்
தமிழக திருவழிபாட்டுப் பணிக்குழு
முப்பணி மையம்
திண்டிவனம்

# மார்ச் - 25, 2022

# புனித மரியாவின் மாசற்ற இதயத்துக்கு உக்ரைனையும் ரஷ்யாவையும் ஒப்புக்கொடுத்தல்

**மன்னிப்பு வேண்டல்**

**அ.ப. :** அன்பார்ந்தவர்களே, இறைவனின் உடனிருப்பை உணர்ந்திருக்கிற நாம், மனுக்குலத்தின் சார்பாக அவரது மன்னிப்பை இறைஞ்சுவோம்.

1. இறைவா, அமைதியின் கருவிகளாய் இருக்க வேண்டிய நாங்கள் அமைதியின் பாதையிலிருந்து விலகிவிட்டோம். எங்களை மன்னியும்.

**பதில் :** ஆண்டவரே எங்களை மன்னித்தருளும். (அல்லது – கருணை இறைவா சரணம். கடைக்கண் பாராய் சரணம்)

2. இறைவா, இரண்டு உலகப் போர்களில் வீழ்ந்த இலட்சக் கணக்கானோரின் தியாகத்தையும், கடந்த நூற்றாண்டு களிலிருந்து நாங்கள் கற்றுக்கொண்ட பாடத்தையும் மறந்து விட்டோம், எங்களை மன்னியும். . . **(உங்கள் பதில்)**

3. இறைவா, நாடுகளிடையே சமூகமாக நிலை நிலவ நாங்கள் செய்திருக்கிற வாக்குறுதிகளைப் புறக்கணித்தமைக்காக எங்களை மன்னியும். . . **(உங்கள் பதில்)**

4. இறைவா, மக்களின் அமைதியான, நிம்மதியான வாழ்வைக் குறித்த கனவுகளையும், இளைஞர்களின் நம்பிக்கைகளையும் எதிர்பார்ப்புகளையும் கண்டுகொள்ளாமல் புறக்கணித்து அவர்களுக்கு தீங்கிழைத்ததற்காக எங்களை மன்னியும். . . **(உங்கள் பதில்)**

5. இறைவா, பேராசையால் எங்கள் சொந்த நாடுகளின் நலன்களை மட்டுமே நினைத்து, பிற நாடுகளை சுரண்டி, அவர்களின் தேவைகளை அலட்சியப்படுத்தி, சுயநலக் கவலைகளில்

சிக்குண்டு கிடப்பதற்காக எங்களை மன்னியும். . . **(உங்கள் பதில்)**

6. இறைவா, உம்மைக் கூட புறக்கணித்து, எங்களின் போலியான மாயைகளில் திருப்தி கண்டு, ஆணவத்தினால் அப்பாவி மக்களை அடக்கவும், ஆயுதங்களைக் குவிக்கவும் நாங்கள் செய்த செயல்களுக்காக எங்களை மன்னியும். . . **(உங்கள் பதில்)**

7. இறைவா, எங்கள் அயலாரின் பொறுப்பாளர்களாகவும் இந்த பூமி என்னும் பொதுவான வீட்டின் பராமரிப்பாளர்களாகவும் இல்லாமல், பூமியைப் போரினால் நாசமாக்கினோம், எங்களை மன்னியும். . . **(உங்கள் பதில்)**

8. இறைவா, இறைத்தந்தையின் பிள்ளைகளான அனைவரும் சகோதர சகோதரிகள் என்பதை மறந்து பிறருக்கு தீங்கு விளைவித்ததற்காக, பிறர் நலனை அலட்சியப்படுத்தியதற்காக வெட்கப்படுகிறோம் எங்களை மன்னியும். . . **(உங்கள் பதில்)**

## உக்ரைனையும் ரஷ்யாவையும் மரியாவின் மாசற்ற இதயத்திடம் ஒப்புக் கொடுக்கும் மன்றாட்டு

**அ.ப :** அன்பின் இறைவா, 'இதோ உன் தாய்' என நீர் எமக்களித்த உமது அன்னையின் மாசற்ற இதயத்தின் பரிந்துரையால் உமதருளைப் பெற இந்த மன்றாட்டை அர்ப்பணிக்கிறோம்.

புனித மரியே, இறைவனின் தாயும் எங்களின் அன்னையுமானவரே, இந்த சோதனை நேரத்தில் நாங்கள் உம்மிடம் திரும்புகிறோம். உமது தாயன்பால் எங்களை அறிந்திருக்கிறீர்; அன்பு செய்கிறீர்; உம்மிடமிருந்து மறைக்கப்பட்டது ஒன்றுமில்லை. இரக்கத்தின் அன்னையே, உமது கனிவான அக்கறையையும், அமைதியான உடனிருப்பையும் நாங்கள் எத்தனையோ முறை எங்கள் வாழ்வில் அனுபவித்திருக்கிறோம். அமைதியின் அரசரான இயேசுவிடம் எங்களை வழிநடத்த ஒருபோதும் நீர் தவறியதில்லை.

புனித அன்னையே, எங்கள் பாவத்துயரங்கள், போராட்டங்கள், வலுவின்மைகள், தீமைகள், போர் போன்ற அக்கிரங்கள்

ஆகியவற்றின் மத்தியில் இறைவன் எங்களை ஒருபோதும் கை விடுவதில்லை. மாறாக, அவர் எங்களை அன்புடன் பார்த்து, எப்போதும் மன்னித்து, புதிய வாழ்வுக்கு உயர்த்த தயாராய் இருக்கிறார் என்பதை நீர் நினைவூட்டுகிறீர். இறைவன் உம்மை எங்களுக்கு தந்து, உமது மாசற்ற இதயத்தையே திரு அவைக்கும் அனைத்து மனித குலத்திற்கும் தஞ்சமாக ஏற்படுத்தினார். இறைவனின் இரக்கத்தால், நீர் எப்போதும் எங்களுடன் இருக்கிறீர்: எங்கள் வரலாற்றின் சிக்கலான தருணங்களில் கூட மென்மையான உமது அன்பால் எங்களை வழிநடத்தி வருகிறீர்.

இப்போது நாங்கள் உம்மிடம் திரும்பி வந்து உமது இதயக் கதவைத் தட்டுகிறோம். நாங்கள் உமது அன்புக்குரிய பிள்ளைகள்; எல்லாக் காலத்திலும் உம்மை எங்களுக்கு வெளிப்படுத்தி உண்மையான மனமாற்றத்திற்கு எங்களை அழைக்கிறீர். இந்த இருளான காலத்தில், எங்களுக்கு உதவ வாரும்; உமது ஆறுதலைத் தாரும்: “உன் தாயாகிய நான் உனக்காக இருக்கிறேன்,” என்று மீண்டும் ஒருமுறை கூறும். எங்கள் இதயங்களிலும் எங்கள் வாழ்க்கையிலும், வரலாற்றிலும் உள்ள முடிச்சுகளை நீர் மட்டுமே அவிழ்க்கமுடியும். சோதனை வேளைகளில், நீர் எங்கள் மன்றாட்டுகளுக்கு செவிசாய்த்து, எங்களுக்கு உதவியாக வருவீர் என்பதை நம்புகிறோம்.

கலிலேயாவிலுள்ள கானாவூரில் உமது வல்லமைமிக்க பரிந்துரையால் இயேசு தன் முதல் புதுமையைச் செய்தார். திருமண விருந்தின் மகிழ்ச்சியைக் காப்பாற்ற, “அவர்களிடம் திராட்சை இரசம் தீர்ந்துவிட்டது” **(யோவா 2:3)** என்று அவரிடம் கூறினீர். அன்பான அன்னையே, இப்போதும் அதே வார்த்தைகளைக் கூறி எங்களுக்காக மன்றாடும். ஏனெனில் எங்கள் காலத்தில் நம்பிக்கை என்னும் திராட்சை இரசத்தை தீர்த்துவிட்டோம்; மகிழ்ச்சி மறைந்துவிட்டது; சகோதரத்துவம் மங்கிவிட்டது. மனித நேயத்தை மறந்து, அமைதியைக் குலைத்து, வன்முறைக்கும் அழிவுக்கும் எங்கள் இதயத்தைத் திறந்தோம். தாயான உமது உதவி எங்களுக்கு எவ்வளது தேவை என்பதை உணர்கிறோம்.

ஆகவே, எங்கள் அன்னையே, எங்கள் மன்றாட்டைக் கேளும். ஆழ்கடல் விண்மீனே, போரென்னும் புயல் எங்கள் கப்பல்களை

உடைக்காதபடி காத்தருளும். புதிய உடன்படிக்கைப் பேழையே, நல்லுறவுக்கான திட்டங்களையும் பாதைகளையும் எங்களுக்குக் காட்டும்.

விண்ணக அரசியே! இறைவனின் அமைதியை இந்த உலகுக்கு மீட்டுத் தாரும். வெறுப்பையும், பழிவாங்கும் உணர்வையும் நீக்கி மன்னிப்பை எங்களுக்கு கற்றுத் தாரும். போரிலிருந்து எங்களை விடுவித்து, அணு ஆயுத அச்சுறுத்தலிலிருந்து உலகைப் பாதுகாத்தருளும்.

செபமாலையின் அரசியே, செபிப்பதன் அவசியத்தையும், அன்பு செய்வதன் தேவையையும் எங்களுக்கு உணர்த்தும்.

மனித குடும்பத்தின் அரசியே, சகோதரத்துவத்தின் பாதையை மக்களுக்குக் காட்டும்.

அமைதியின் அரசியே, உலகிற்கு அமைதியைப் பெற்றுத்தாரும்.

தாயே, உமது துயர்நிறைந்த பரிந்துரை எங்களின் கடினமான இதயங்களை அசைக்கட்டும். எங்கள் வெறுப்பால் நிறைந்திருக்கிற பள்ளத்தாக்கை எங்களுக்காக நீர் சிந்துகிற கண்ணீரால் நிறைத்து மீண்டும் புதுவாழ்வு தாரும். ஆயுதங்களின் இரைச்சல்களுக்கு மத்தியில் உமது பரிந்துரை எங்கள் எண்ணங்களை அமைதிக்கு திருப்பட்டும். வெடிகுண்டுகளின் மழையால் தாக்கப்பட்டவர் களையும், தப்பி ஓடுபவர்களையும் உமது தாய்மையின் தொடுதல் ஆறுதல் தருவதாக. தங்கள் வீடுகளையும் சொந்த நிலங்களையும் விட்டுவிட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்தில் இருப்பவர்களுக்கு உமது அரவணைப்பு தேற்றவாய் இருப்பதாக. வேதனை நிறைந்த உமது இதயம் எங்களை இரக்கமுள்ளவர்களாய் மாற்றி, காயமடைந்து புறந்தள்ளப்பட்ட எங்கள் சகோதர சகோதரிகளைப் பராமரிக்க எங்களால் முடிந்தவற்றைச் செய்ய ஊக்குவிப்பதாக.

இறைவனின் தூய அன்னையே, நீர் சிலுவையடியில் நின்றபோது இயேசு உம் அருகிலிருந்த சீடரைப் பார்த்து, “இதோ, உம் மகன்” (யோவா 19:26) என்றார். இவ்வாறே, “இதோ உன் தாய்”

(யோவா 19:27) என எங்கள் ஒவ்வொருவரையும் அவர் உம்மிடம் ஒப்படைத்தார். அன்னை மரியே, இப்போது நாங்கள் உம்மை எங்கள் வாழ்விலும், வரலாற்றிலும் வரவேற்க விரும்புகிறோம். இந்த வேளையில், சோர்வுற்றுத் தவிக்கிற மனிதகுலம் சிலுவையடியில் உம்மோடு நிற்கிறது. தன்னையே உம்மிடம் ஒப்படைத்து உம் வழியாக கிறிஸ்துவுக்கு தன்னை அர்ப்பணிக்க உம்மை வேண்டுகிறது. உக்ரைன், ரஷ்யா மக்கள் உமக்கு மிகுந்த அன்புடன் வணக்கம் செலுத்துகின்றனர்.

போராலும், பசியாலும், அநீதியாலும், வறுமையாலும், இன்னலுற்றுத் தவிக்கிற அவர்களுக்காக உமது இதயம் இரக்கத்துடன் துடிப்பதை உணர்ந்து உம்மிடம் திரும்புகிறார்கள். ஆகவே, இறைவனின் அன்னையும் எங்களின் தாயுமான உமது மாசற்ற இதயத்திற்கு எங்களையும், திரு அவையையும், அனைத்து மனித குலத்தையும், குறிப்பாக உக்ரைன், ரஷ்யா நாடுகளையும் நாங்கள் நம்பிக்கையுடன் அர்ப்பணிக்கிறோம். அன்புடனும் நம்பிக்கையுடனும் நாங்கள் மேற்கொள்ளும் இந்தச் செயலை ஏற்றருளும். போர் முடிவடைந்து உலகம் முழுவதும் அமைதி பரவச் செய்தருளும். உம் இதயத்திலிருந்து எழுந்த 'ஆகட்டும்' என்ற வார்த்தை அமைதியின் அரசருக்கு வரலாற்றின் கதவுகளைத் திறந்தது. உமது மாசற்ற இதயத்தின் வழியாக மீண்டுமொருமுறை அமைதி உதயமாகும் என நாங்கள் நம்புகிறோம். முழு மனித குடும்பத்தின் எதிர்காலத்தையும், ஒவ்வொரு மனிதரின் தேவைகளையும், எதிர்பார்ப்புகளையும், உலகின் கவலைகளையும், நம்பிக்கைகளையும் உமது மாசற்ற இதயத்திற்கு நாங்கள் அர்ப்பணிக்கிறோம்.

உமது பரிந்துரையின் உதவியால், இறைவனின் இரக்கம் இப்பூவுலகில் பொழியட்டும்; எங்கள் அமைதியின் நாட்கள் திரும்பட்டும். தூய ஆவி நிழலிட்ட அன்னையே, 'ஆகட்டும்' என்று இறைதிட்டம் ஏற்ற தாயே, இறைவன் தரும் ஒற்றுமையையும், நல்லிணக்கத்தையும் பெற்றுத் தாரும். எங்கள் நம்பிக்கையின் ஊற்றே, எங்களின் இதயங்களில் வறட்சியைப் போக்கி, ஒற்றுமையை வளர்க்க உதவியருளும். நீர் இவ்வுலகின் வீதிகளில் நடந்து சென்றீர்; இப்போது எங்களை இவ்வுலகில் அமைதியின் பாதையில் நடத்திச் செல்லும். ஆமென்.